வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, நவம்பர் - 2016

FWC

## Term Examination, November - 2016

| தரம் :- 13 (2017) | புள்ளித்திட்டம் | அரசியல் விஞ்ஞானம் |
|---|---|---|

### பகுதி I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01) | **3** | 11) | **4** | 21) | **1** | 31) | **3** | 41) | **5** |
| 02) | **2** | 12) | **4** | 22) | **4** | 32) | **1** | 42) | **4** |
| 03) | **1** | 13) | **1** | 23) | **4** | 33) | **3** | 43) | **2** |
| 04) | **3** | 14) | **5** | 24) | **1** | 34) | **4** | 44) | **5** |
| 05) | **2** | 15) | **4** | 25) | **4** | 35) | **1** | 45) | **1** |
| 06) | **2** | 16) | **5** | 26) | **3** | 36) | **3** | 46) | **1** |
| 07) | **5** | 17) | **4** | 27) | **2** | 37) | **3** | 47) | **5** |
| 08) | **1** | 18) | **1** | 28) | **4** | 38) | **1** | 48) | **3** |
| 09) | **4** | 19) | **1** | 29) | **2** | 39) | **3** | 49) | **4** |
| 10) | **1** | 20) | **2** | 30) | **2** | 40) | **1** | 50) | **4** |

### பகுதி - A

01. (1) ஒற்றையாட்சி (2) கூட்டாட்சி
02. (1) அரசாங்கம் (2) அரசு
03. (1) இறைமை (2) சட்டம்
04. (1) தெய்வவழிக்கோட்பாடு (2) சமூக ஒப்பந்தக் கோட்பாடு
05. (1) வலுவேறாக்கல் கோட்பாடு (2)இறைமை
06. (1) ஒப்பங்கோடல் (2) திருப்பியழைத்தல் / மீளஅழைத்தல்
07. (1) புராதன கொம்யூனிச சமுதாயம் (2) சோசலிச சமுதாயம்
08. (1) பிரதிநிதிகள் சபை - 438 - 2 வருடங்கள்
    (2) செனற் சபை - 100 - 6 வருடங்கள்
09. (1) ஒற்றைக் குடியுரிமை (2) மாநிலங்களின் சமமற்ற பிரதிநிதித்துவம்
10. (1) சூழமைவு (2) நடத்தை (3) மனப்பாங்கு
11. (1) மனிங் யாப்பு (2) டொனமூர் யாப்பு
12. (1) 1910 - குறூ-மக்கலம் (2) 1910 - குறூமக்கலம்
13. (1) பிரதம செயலாளர் (2) மொலமூரே
14. (1) சிறுபான்மை இனத்திற்குப் போதிய பிரதிநிதித்துவம் பாதுகாப்பு வழங்கல்
    (2) ஏனைய குடியேற்ற நாடுகளிலும் இச்சபை காணப்படல்
15. (1) யாப்பின் 29ம் சரத்து (2) செனற் சபை (ஏனைய வேறு விடைகள்)
16. (1) சட்டமசோதாக்களுக்கு மகாதேசாதிபதி ஒப்பமிடல்
    (2) இலங்கை சார்பாக சட்டமியற்ற பிரித்தானியப் பாராளுமன்றம் கொண்டிருந்த அதிகாரம்.
17. (1) தேசிய சுதந்திரம் பெறல் (2) சமவுடைமை சமூகத்தை உருவாக்கல்

18. (1) தன்னிறைவுப் பொருளாதாரம் சிதைவடைந்தமை
(2) முதலாளித்துவத்தின் தோற்றம் - ஏனைய பொருத்தமான விடைகள்

19. (1) வில்லியம் கோபல்லாவ (2) வில்லியம் கோபல்லாவ

20. (1) தேசிய அரசுப் பேரவை (2) குடியரசு ஜனாதிபதி
(ஏனைய பொருத்தமான விடைகள்)

## பகுதி - B

**1.**

i. சமூக நோக்கங்கள்

- ஜனநாயக ரீதியில் செயற்படும் நல்ல பிரசைகளை உருவாக்கல்.
- ஜனநாயக ரீதியான வாழ்க்கை முறையை ஏற்றுக்கொள்ளல்.
- அரசியல் அறிவினை விரிவுபடுத்துதல்.
- நுட்பமாக ஆராயும் இயல்புடைய மக்களை உருவாக்குதல்.
- தேசிய அரசியல், சர்வதேச அரசியல் என்பன பற்றி சமநிலையான பக்கச்சார்பற்ற புரிந்துணர்வைப் பெறுதல்.

பாடம் சார்ந்த நோக்கங்கள்

- அரசின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் ஆராய்தல்.
- தற்கால அரசியல் யாப்புக்கள், அரசியல் முறைகள், சட்டத்தின் வகைகள் என்பவற்றை விளக்கி ஒப்பிடுதல்.
- சட்டம் இயற்றும் முறைகள், சட்டமியற்றும் நிறுவனங்கள் சட்டங்களைச் செயற்படுத்தும் முறைகள் என்பவற்றை ஆராய்தல்.
- அரசியற் கட்சிகள், அமுக்கக் குழுக்கள் பற்றி ஆராய்தல்.
- அரசுகளுக்கிடையே காணப்படும் உறவுகள் சர்வதேச சட்டங்கள், சர்வதேச நிறுவனங்கள் என்பன பற்றி ஆராய்தல்.

ii. அரசியல் என்பது அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த மனித சமூகத்தில் அரசியல் போராட்டத்தை நடைமுறைப்படுத்தும் பிரயோகச் செயன்முறை. அரசியல் என்பது நடைமுறைக்கலை. இதில் ஓர் அரசியல் முறைமை எதிர்கொள்ளும் அரசியல் பொருளாதார சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு என்ன செய்யவேண்டும் என்பது தொடர்பாக அரசியல்வாதிகளும் கட்சிகளும் முன்வைக்கும் தீர்வுகள் செயற்பாடுகளுக்கிடையில் வேறுபாடுகளின் அடிப்படையில் அரசியல் இடம்பெறும்.

அரசியல் விஞ்ஞானம் என்பது விஞ்ஞான ரீதியாகக் கற்பிக்கப்படும் கற்கைநெறியை உள்ளடக்கிய சமூக விஞ்ஞானமாகும். மனிதர்களின் பொது நன்மைகளை ஒழுங்கமைத்து விருத்தி செய்யும் நோக்கில் எதனை எவ்வாறு செய்யவேண்டும் என்பதை விஞ்ஞான ரீதியாகக் கற்கும் ஒரு பாடமாகும். அரசியல் சார்ந்த அரசு, அரசாங்கம் மக்களாகிய அடிப்படை அலகுகளுக்கிடையிலான தொடர்புகளின் இயல்பு மக்களுக்கு ஏற்ற பொருத்தமான அரசாங்க முறை அரசியல் பொருளாதாரக் கருத்துக்களும் பற்றி விஞ்ஞானரீதியாகக் கற்கும் ஒரு பாடமாகும்.

**2.**

i. இனவாதத்தை நிறுவனமயப்படுத்தியமையால் இவ்வாறான பெயரைக்கொண்டு விளங்குகின்றது. அரசியல் வன்முறை, கலகங்கள், குழப்பங்கள் மூலம் ஏற்படலாம். இராணுவ ஆட்சி, கெரில்லா போர், பயங்கரவாதம், சமயப்புரட்சி போன்றவற்றிலும் இவற்றைக் கண்டுகொள்ளலாம்.

ii. அரசாங்கம், குடும்பம், சந்தை தவிர்ந்த அனைத்து மக்கள் அமைப்புக்களின் கூட்டுமொத்தமாகும். விளங்கிக்கொண்டுள்ள ஆர்வங்கள், நோக்கங்கள், பெறுமானங்களுக்காக அதிகாரம் பிரிப்பு இன்றி கூட்டாகச் செயற்படும் சமூகப்பரப்பு சிவில் சமூகம் எனப்படும். (தோற்றத்துக்கான காரணிகள், இயல்புகள் குறிப்பிட்டு விளக்குதல் வேண்டும்)

iii. அரசியல் முறையில் வாழும் மக்கள் அவ் அரசியல் முறையின் பண்புகள், நம்பிக்கைகள், மதிப்பீடுகள் ஆகியவற்றின் கூட்டாகும் என்னும் வகையில் விளங்குதல் வேண்டும்.

iv. அரசாங்கத்தின் வழிகாட்டியாகவும் நிர்வாகத்தினால் நடைமுறைப்படுத்தும் ஒன்றாகவும் காணப்படுகிறது. இதன் நோக்கம், இலக்கு, செயற்பாட்டு முறையினை வெளியிடல், சமூகப் பெறுமதியின் அளவினை வெளியிடல் போன்ற அம்சங்களைக் கொண்டுள்ளது என்ற வகையில் விளக்கிச் சொல்ல வேண்டும்.

**3.**

i. தனியார் உடைமை, அரசு பொருளாதார நடவடிக்கையிலிருந்து விலகியிருத்தல், பொருளாதார நெறிப்படுத்தல் தனியாட்களால் மேற்கொள்ளப்படுதல், வர்த்தக சக்திகள் பொருளாதாரத்தைத் தீர்மானித்தல், அரசு மக்களின் தனித்துவத்தை விருத்தி செய்யத் தேவையான சமூக நிபந்தனைகளை உருவாக்குதல், அரசு சட்டத்தையும் சமாதானத்தையும் நிலைநாட்டுதல்.

ii. உலக பொருளாதார மந்தத்தின் பின்னர் (1928 - 29) தோற்றம் பெற்றது. 2ம் உலக யுத்தத்தின் பின் நலன்புரி அரசுகள் பலம் பெறுதல். ஜோன் மொனாட் கேயின்ஸ் என்பவரின் பொருளாதாரக் கோட்பாட்டின் மூலம் இதற்கு முக்கியத்துவம் கிடைத்தல். தனியார் துறை கவனம் செலுத்தாத துறை மீது அரசு நேரடியாகத் தலையிடுதல், பல்வேறு நலன்புரி பாதுகாப்பு நடவடிக்கைகள், எந்தவொரு பிரஜைக்கும் பாரபட்சம் காட்டாமை, பொருளாதார சமூக நடவடிக்கைகளை அரசு முகாமைத்துவம் செய்வதற்காக நேரடியாகத் தலையிடல்.

iii. அரசு சமூக நலன்புரி சேவையில் ஈடுபடுவதனால் மக்களது செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்படும். பொருளாதார செயற்பாடுகளில் அரசு தலையீடு காணப்படுவதனால் தனியார் துறையின் பங்குபற்றல் குறைவடைதல், இதனால் பொருளாதார முதலீடுகள், பொருளாதார விருத்தி மந்தகதியாதல், ஊழல், மோசடி, வீண்விரயம், செயற்றிறனின்மை என்பன அரச நிறுவனங்களில் ஏற்படல். அரசின் நலன்புரிக்காக அதிக நிதி ஒதுக்கப்படுவதனால் குறைநிலை வரவுசெலவுத்திட்டத்தினை அரசு சமர்ப்பித்தல். பொருளாதார அரசியல் நெருக்கடிகள் ஏற்படல்.

iv. 1970களின் பின் தோன்றிய புதிய எண்ணக்கரு பொருளாதார நடவடிக்கையிலிருந்து அரசு முடியுமானவரை விலகி இருத்தலையே குறைந்தபட்ச அரசு எனலாம். மில்ற்றன், ப்ரீட்மன் போன்றோரின் முதலாளித்துவமும் சுதந்திரமும் தத்துவம் குறைந்தபட்ச அரசுக்கான சட்டப்பின்னணியை வழங்குகின்றது. இங்கு அரசு பொருளாதார நடவடிக்கையிலிருந்து முற்றுமுழுதாக விலகியிருக்காது. சமூக விவகாரங்களில் அரசின் குறைந்த முகாமைத்துவம் பொருளாதார விடயங்களில் தனியார் துறைகளது முகாமைத்துவமும் காணப்படும்.

**4.**

i. அதிகாரம் கூடிய இரண்டாம் மன்றம், சாதாரண சட்டங்களை ஆரம்பித்தல், நிதிச் சட்டங்களில் திருத்தம் செய்தல், குற்றப் பிரேரணையை விசாரித்தல், ஜனாதிபதி நியமங்களை அங்கீகரித்தல், உறுப்பினர்களின் எண்ணிக்கை சிறியதாகவும் பதவிக்காலம் நீண்டதாகவும் காணப்படுகின்றமை.

இதன் உறுப்பினர்களின் அதியுயர் ஏற்படுத்தலுக்கு உட்படும் மூத்த அரசியல் வாதிகளாக இருக்கின்றமை, இதன் உறுப்பினர்கள் நேரடியாகத் தெரிவுசெய்யப்படுகின்றமை, செனற் உறுப்பினர்கள் வரையறுக்கப்படாத பேச்சுச் சுதந்திரத்தைக் கொண்டிருக்கின்றமை.

செனற் சபையின் சம்மதம் இன்றி ஜனாதிபதியோ மக்கள் பிரதிநிதிகள் சபையோ எதனையும் மேற்கொள்ள முடியாமை.

ii. மாநில அரசுக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரங்களும் மத்திய அரசிடம் ஏனைய அதிகாரங்களும் காணப்பட மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து செயற்படும் சில விடயங்களில் மத்திய அரசே அதிகாரம் கூடியதாக இருக்கும். மாநிலங்களின் ஒன்றியம் என்ற சொற்பிரயோகம், ஒற்றைக் குடியுரிமை காணப்படுகின்றமை, ராஜ்யசபை உறுப்பினர்கள் மக்களாலன்றி மாநிலங்களிலிருந்து தெரிவுசெய்யப்படுகின்றமை, ஜனாதிபதி மாநிலங்களைக் கலைக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளமை, மாநிலங்களுக்குப் பிரிந்துசெல்லும் அதிகாரமின்மை,மாநில ஆளுநர்கள் மக்களாலன்றி குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகின்றமை.

iii. ஏழு உறுப்பினர்களைக் கொண்டது. சமஷ்டி சபையால் நியமிக்கப்படுவது, தலைவர் ஒருவர் இருப்பதுடன் ஏனைய சமமான அங்கத்தவர்களில் முதன்மையானவரும் ஆவார். பதவிக்காலம் 4 வருடங்களாகும். தலைவர் ஒரு வருடத்திற்கு நியமிக்கப்படுவார். துணைத்தலைவர் அடுத்தவருடத் தலைவராவார். என்றவகையில் பூரண விளக்கம் தரப்பட்டிருத்தல் வேண்டும்.

iv. இங்கிலாந்தின் பிரபுக்கள் சபை சாதாரண சட்டங்களை ஆரம்பிக்கும் பிரதிநிதிகள் சபையால் கொண்டுவரப்படும் சட்டங்களை அங்கீகரிக்கும். நிதி மசோதாவை ஒருமாத காலத்துக்குத் தாமதப்படுத்தும். சான்சிலர் பிரபு தலைமை தாங்குவார். 5 வகையான பிரபுக்கள் அங்கம் வகிக்கின்றனர். மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தாத மக்களுக்குப் பொறுப்புக்கூறக் கடமைப்படாத ஒரு சபையாகும். பிரித்தானியாவின் பழமையின் சின்னமாக இது நீடித்து வருகின்றது. பெருந்தொகையான பணம் இச்சபைக்காகச் செலவிடப்படுகின்றது. அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு தேவையற்ற தடைகளை ஏற்படுத்துகின்ற சபையாகவும் கருதப்படுகின்றது.

## பகுதி - C

**5.**

i. ஆங்கிலேயரின் சமயக் கொள்கை, ஆங்கிலக் கல்வியின் தாக்கத்தினால் இலங்கைக் கலாசாரம் பாதிப்படைந்தது. இதுவே சமய மறுமலர்ச்சி இயக்கங்கள் தோன்றுவதற்குரிய காரணமாக அமைந்தது. பௌத்த, இந்து, இஸ்லாமியத் தலைவர்கள் மத்தியதர வர்க்கத்தின் ஆதரவோடு சமய கலாசாரத்தைப் பாதுகாக்க 1870-1975 காலப்பகுதியில் சமய மறுமலர்ச்சி இயக்கத்தை ஆரம்பித்தனர்.
பௌத்த சமயத்தை வளர்ப்பதில் அநாகரிக தர்மபாலா, ஹிக்கடுவை ஸ்ரீ சுமங்கல தேரர், மீகொட்டுவத்த குணானந்த தேரர், இந்துசமயத்தை வளர்ப்பதில் ஆறுமுகநாவலர், முஸ்லீம் சமயத்தை வளர்ப்பதில் அறிஞர் சித்திலெப்பை, ஜாயா போன்றோரின் பங்களிப்பை விளக்கியிருத்தல் வேண்டும்.

ii. தேசிய காங்கிரசின் நோக்கங்கள்

- பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் கீழ் உள்நாட்டுச் சுயாட்சிப் பொறுப்பைப் பெற்ற ஒரு பிரிதிநிதியின் நிலையைப் பெற்றுக்கொள்ளுதல்.
- மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் வரிமுறைகளைச் சீர்செய்தல்.
- 14 வயதைத் தாண்டிய சகலருக்கும் பாடசாலைக் கல்வியைக் கட்டாயமாக்குதல்.
- இலங்கையில் ஒரு பல்கலைக்கழகத்தை ஸ்தாபித்தல்.
- சிறுவர் ஊழியத்தைப் பயன்படுத்துவதனை ஒழித்தல்.
- தொழிலாளர்களுக்கு அதிக சம்பளத்தையும் குறைந்த நேரத்தையும் விதித்தல்.
- தேசிய செல்வத்திலிருந்து அதிக தொகையை ஒதுக்கி கல்வி முறையைச் சீர்திருத்துதல்.

iii. 1935 டிசம்பர் மாதம் இலங்கை சமசமாசக் கட்சியின் உதயம். இதுவே இலங்கையின் இடதுசாரி இயக்கத்தின் ஆரம்பம். புரட்சிகர மத்தியதர வர்க்கம் தலைமை தாங்கியது. இடதுசாரி இயக்கத்தின் இரு பிரதான நோக்கங்கள் :

- தேசிய சுதந்திரத்தை வென்றெடுத்தல்
- பொதுவுடமைச் சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்புதல்.

இடதுசாரி இயக்கத்தின் தோற்றத்திலும் விருத்தியிலும் செல்வாக்குச் செலுத்திய காரணிகள்

- 1930களில் ஏற்பட்ட உலகப் பொருளாதார நெருக்கடி.
- 1917ல் ஏற்பட்ட ரஷ்யப் புரட்சி
- பொப்பிமலர் இயக்கத்துக்கு எதிராக 1931ல் ஆரம்பித்த சூரியமல் இயக்கம்.

iv. முதலாம் உலகமகா யுத்தத்தில் சேவையாற்றிய இராணுவ வீரர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உதவும் வகையில் பிரித்தானிய அரசாங்கத்தால் இலங்கையில் பொப்பிமலர் பூ விற்பனை செய்யப்பட்டது. இதனைப் பொப்பிமலர் இயக்கம் என அழைப்பர். இக்காலத்தில் வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தில் படித்து மாக்சிசக் கருத்துக்களால் கவரப்பட்ட சிலர் நாடுதிரும்பி அவர்கள் பொப்பிமலர் இயக்கத்தைக் கண்டித்து 1933ம் ஆண்டு சூரியமல் இயக்கத்தை ஆரம்பித்தனர். கலாநிதி N.M.பெரேரா, பிலிப் குணவர்த்தனா, கலாநிதி எஸ். ஏ. விக்கிரமசிங்க போன்றோர் முக்கியமானவர்கள். சூரியகாந்திப் பூவை விற்று அப்பணத்தைப் பின்தங்கிய தோட்டப்பகுதியிலும், மலேரியா நோயினால் பாதிக்கப் பட்டோருக்கும் வழங்கப்பட்டது. சூரியமல் இயக்கமே பின்னர் லங்கா சமசமாசக் கட்சியாக மாற்றம்பெற்றது.

**6.**

i. முழு அதிகாரங்களும் இலங்கையிடம் ஒப்படைக்கப்படவில்லை. தீர்மானம் எடுக்கும் பொறுப்பு பலரின் கைகளிலே இருந்ததனால் காலதாமதம் ஏற்பட்டது. சிறுபான்மை இனத்தவர்கள் பாதிக்கப்பட்டனர். கூட்டுப்பொறுப்பு காணப்படவில்லை. அமைச்சர்கள் தனிப்பட்ட முறையில் தனிப்பட்ட நோக்கங்களுக்காகவே செயற்பட்டனர். மந்திரிமார் ஒரு பிரதமரின் கீழ் செயற்படாமையால் ஒரே நோக்கில் ஒரே திசையில் செயற்பட முடியவில்லை. நிர்வாகம், நிதி, நீதி போன்ற பிரதான துறைகளில் இலங்கை அமைச்சர்களுக்கு அதிகாரம் கிடைக்கப்பெறாமையால் அவர்கள் சுதந்திரமாகச் செயற்பட முடியவில்லை.

ii. மூன்று அரசாங்கக் காரியதரிசிகள்
இவர்களின் தெரிவு, நியமனம், பதவிக்காலம், அதிகாரம் என்பவற்றை விளக்கியிருத்தல் வேண்டும்.

iii. மக்கள் நலன் பேண் நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டன. தொழிலாளர் நலன்பேணும் நடவடிக்கைகளும் உருவாக்கப்பட்டன. சாதாரண மக்களும் அரசியல் அரங்கிற்கு கொண்டுவரப்பட்டனர். அரசியல் கட்சிகள் வளர்ச்சியடைந்தன. தொழிற்சங்கங்கள் வளர்ச்சியடைந்தன. வாக்காளர்களுக்கும் பிரதிநிதிகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உருவாகியது. சிறுபான்மையினரும் அரசியல் செயன்முறைகளில் ஈடுபட வாய்ப்பு ஏற்பட்டது.

iv. பிரித்தானிய முடியின் பிரதிநிதி. அரசாங்கத்தின் அச்சாணி. பிரித்தானியக் குடியேற்ற நாட்டு மந்திரிக்குக் கட்டுப்பட்டவர். முடியினால் நியமனம். முடி விரும்பும் வரை பதவி வகிக்கலாம். அதிகாரங்கள் :

- சடங்கு முறையானதும் நெருக்கடி நிலைகளுக்கு உட்படாத அதிகாரங்கள்.
- அரசாங்க சேவையோடு தொடர்பான அதிகாரங்கள்
- நிறைவேற்று அதிகாரங்களும் உறுதிப்படுத்தும் அதிகாரங்களும்.
- அரசாங்கசபை தொடர்பான அதிகாரங்கள்
- விஷேட நிலைகளின் போது சட்டங்களைப் பிறப்பிக்கும் அதிகாரம்

**7.** சிறுபான்மையோர் காப்பீடுகள்

- அரசியல் யாப்பின் 29 (2) ஆம் உறுப்புரை
- செனற் சபை
- பல அங்கத்தவர் தேர்தல் தொகுதிமுறை
- ஆறு நியமன அங்கத்துவம்
- அரசாங்க சேவை, நீதிச்சேவை ஆணைக்குழுக்கள்
- கோமறைக் கழகம்
- தேர்தல் தொகுதி பிரிக்கும் ஆணைக்குழு
- தேசாதிபதியின் நியமன அதிகாரங்கள்
  (போதுமான விளக்கம்)

**8.**

i. இலங்கையின் வேண்டுகோளின் பேரில் இலங்கை தொடர்பாக சட்டவாக்கம் செய்வதற்கு பிரித்தானியப் பாராளுமன்றம் பெற்றிருந்த அதிகாரம்

- இலங்கைப் பாராளுமன்றம் நிறைவேற்றும் சில மசோதாக்கள் சட்டமாவதற்கு பிரித்தானிய முடியின் அங்கீகாரத்தை நேரடியாகவே பெற்றுக்கொள்ள வெண்டியிருந்தமை.
- தேவைப்படும் போது சில மசோதாக்களுக்கு முடியின் பிரதிநிதியாகிய ஆள்பதி நாயகம் அங்கீகாரம் வழங்க மறுக்க முடியுமாகவிருந்தமை.
- இலங்கை அரசாங்கம் பிரித்தானிய அரசாங்க மரபுகளைப் பின்பற்ற வேண்டியிருந்தமை.
- இலங்கையின் நிறைவேற்று விடயங்கள் தொடர்பான அதிகாரங்கள் தொடர்ந்தும் பிரித்தானிய முடியிடமே காணப்பட்டமை.
- பிரித்தானி முடி மகாதேசாதிபதியை நியமித்ததுடன் அவர் அப்பதவியை முடியின் விருப்பத்தின்படி தொடர்ந்தும் பதவிவகிக்க முடிந்தமை.
- சோல்பரி யாப்பில் அடிப்படை உரிமைகள் பற்றிய ஏற்பாடுகள் இடம்பெறாமை.

போன்ற காரணங்கள் முதலாவது குடியரசு யாப்பு உருவாவதில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

ii. முதலாவது குடியரசு அரசியலமைப்பிலுள்ள குறைபாடுகள் 1977ம் ஆண்டு தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சிக்குக் கிடைத்த பெருவெற்றி. ஐக்கியதேசியக் கட்சியின் நீண்டகால இலக்குகள் இவை போன்ற பொருத்தமான விளக்கங்கள்.